# வடக்கில் குற்றச் செயல்களுக்கு மிக விரைவில் முடிவு கட்டப்படும்!



## புதிதாகப் பதவியேற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதி!

வடக்கு மாகாணத்தில் குற்றச் செயல்கள் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால தெரிவித்தார்.

அண்மையில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றிருந்த திலக் சி.ஏ.தனபால வடக்கின் நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சியே. வடக்கில் ஏற்கனவே பணியாற்றியவன் என்ற அடிப்படையில் இங்குள்ள பிரச்சினைகள் பலவற்றை அனுபவ ரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் நான் அறிவேன். ஆதலால், வடக்கு மாகாண மக்களுடன் இணைந்து பணியாற்றுவதில் எனக்கு எந்தச் சிரமமும் இருக்கப்போவதில்லை. 2▶

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 14 புதன்கிழமை 27.03.2024 கதிர் 213

## முன்னாள் போராளி ரி.ஐ.டியால் கைது!

கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்த முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசிக்கும் போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவர் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், கடந்த 12 ஆம் திகதி கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும், அன்றைய தினம் அவர் வாக்குமூலம் வழங்கச் செல்லாத காரணத்தால் நேற்று (26) மீண்டும் அழைக்கப்பட்டிருந்தார்.

விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்யும் வகையில் முகநூலில் அவர் பதிவிட்டிருந்தார் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## நான் பதவியிலிருந்து விலக வேண்டிய அவசியமில்லை நாட்டுக்கு நல்லதை செய்யாத போதே பதவி விலகுவேன்!

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக அதன் ஆளுநர் பதவியிலிருந்து விலகப் போவதில்லை, என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எனக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களின் 2▶

## ஜனாதிபதித் தேர்தலே முதலில்! உறுதிப்படுத்தியது ஐ.தே.க.



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார். எனவே, முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும்." - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"கிரிக்கெட் விளையாட்டில் நடுவர்களிடம் ஆட்டமிழப்பா? இல்லையா? என வீரர்கள் வினவலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. ஆனால், போட்டி விதிமுறைகளுக்கு அமையவே நடுவரின் தீர்ப்பு அமையும்.

அதுபோலவே முன்கூட்டியே பொதுத்தேர்தலை நடத்துமாறு சிலர் கோரலாம். எனினும், ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார்.

நாடு முன்னேற வேண்டுமெனில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டும்." - என்றார். (அ)

## அதிவேக நெடுஞ்சாலைகள் கைமாறுகின்றன! அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம்

### ஏப்ரல் 1 முதல் முறையான முகாமைத்துவத்தின் கீழ் வருமாம்

இதுவரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கி வந்த அதிவேக நெடுஞ்சாலைகளை 'சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்' நிறுவனம் வசம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெடுஞ்சாலைகள் வலையமைப்பு, நெடுஞ்சாலைகளுக்குச் சொந்தமான நிலம், நெடுஞ்சாலைக் கடன்கள் (உள்ளூர்) மற்றும் தொடர்புடைய ஊழியர்களை வணிக ரீதியில் முகாமைத்துவப்படுத்தி முன்னேற்றும் நோக்கில் இவற்றை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாகத்திலிருந்து பிரித்தெடுத்து, சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதற்கமைய, ஏப்ரல் முதலாம் திகதி முதல் முறையான முகாமைத்துவ ஒப்பந்தத்தின் கீழ் நெடுஞ்சாலைகளின் தினசரிச் செயல்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் ஆகியன சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் நிறுவனத்தின் வசம் ஒப்படைக்கப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் ஆகியன ஒன்றிணைந்து மேற்கொள்ளும் சட்டபூர்வ மற்றும் நிதிச் சாத்தியக்கூறு ஆய்வுகளின்பின்னர் ஆறு மாதங்களுக்குள் அனைத்து தொடர்புடைய சொத்துகளும் சஹாஸ்யா நிறுவனத்திற்கு 2▶

## வடக்கில் 2023 இல் 52 பேர் படுகொலை

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் 52 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டதற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் 52 பேர் கடந்த ஆண்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 19 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பேரும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 8 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 பேரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி படுகொலைகள் தொடர்பில் சந்தேகத்தில் 129 பேர் கைதாகியுள்ளனர். இவர்களில் 38 பேர் மாத்திரம் நீதிமன்றத்தின் ஊடாகப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கைக்கு கடன் மறுசீரமைப்பு ஆதரவளிக்க சீனா மீண்டும் உறுதி!



இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்குத் தொடர்ச்சியாக ஆதரவளிப்பதாக சீனா மீண்டும் உறுதியளித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் சீனப் பிரதமருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த 2▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கோப் குழுவின் தலைவராக கள்வரை நியமித்துள்ளனர்! நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் குற்றச்சாட்டு

வாழ்க்கை செலவினை அதிகரித்து அரசாங்கம் கள்வர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையினையே மேற்கொண்டு வருவதாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. ஆனால் வருமானம் அதிகரிக்கவில்லை. வரவின்றி செலவு அதிகரித்துச் செல்கின்றது. பொருளாதார ஸ்திரதன்மை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுமாயின் வாழ்க்கைச் செலவு குறைவடைய வேண்டும். மின்சாரக் கட்டணம் நீர்க்கட்டணம் குறைவடைய வேண்டும்.

நடைமுறையில் அவ்வாறு எதனையும் செய்யாமல் பொருளாதார ஸ்திரதன்மை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறமுடியாது.

எனவே பொருளாதாரக் கொள்கை தவறாகக் காணப்படுகின்றது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டில் பலர் வேலைவாய்ப்பு இன்றி உள்ளனர்.



தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளன.

கோப் குழுவின் தலைவராக கள்வரை நியமித்துள்ளனர். கள்வர் மற்றுமொரு கள்வரை பிடிக்கமாட்டார்.

எனவே அரசாங்கம் கள்வர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையினையே தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளது" எனவும் விஜித்த ஹேரத் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)

## இலங்கைக்கு கடன் ....

விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் சீனா தொடர்ச்சியாக ஆதரவளிக்கும் என்று சீனப் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

பொருளாதாரப் பின்னடைவின் பின்னர் இலங்கை பெற்றுள்ள முன்னேற்றத்தையும் சீனப் பிரதமர் இதன்போது பாராட்டியுள்ளார்.

இதனிடையே, சீனாவுக்கு உத்தியோ கபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று அந்நாட்டின் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, இலங்கைப் பிரதமரின் விஜயத்துக்கு இணையாக சீனா மற்றும் இலங்கை இடையில் நேற்று 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

(அ)

## அதிவேக நெடுஞ்சாலைகள் ....

மாற்றப்படவுள்ளன.

இதனுடன் தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவினால் 25 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. (ரெம-94)

# ஈஸ்டர் பண்டிகையின் நாளின் போது தேவாலயங்களில் பலத்த பாதுகாப்பு

ஈஸ்டர் பண்டிகையையொட்டி, கிறிஸ்தவ தேவாலயங்களில் இடம்பெறும் சிறப்பு வழிபாடுகளின் போது, அங்கு வருகை தரும் சந்தேகத்திற்குரிய நபர்கள் குறித்து, தங்கள் பிரதேசத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்குமாறு, அனைத்து கிறிஸ்தவ சமயத்தவர்களையும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. மேற்படி பாதுகாப்பு பணிகளில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து கொள்வதுடன், கிறிஸ்தவ தேவாலயங்களைச் சேர்ந்த தன்னார்வ சேவையினரும் இதற்கு தமது ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர் எனவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெம-96)

## வடக்கில் குற்றச் ....

வடக்கு மாகாணத்தில் வீதிப் போக்குவரத்தில் உள்ள குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டு மேம்பட்ட ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும். போதைப்பொருள் பிரச்சினைகள், சமூகத்தில் புரையோடிப் போயுள்ள இதர குற்றச் செயல்கள் விரைவில் கட்டுப்படுத்தப்பட்டு பொதுமக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் விரைவில் மேற்கொள்வேன்." - என்றார். (அ

# 'ஐயோ சாமி' பாடலுக்கு 'எடிசன்' விருது!



தமிழ் நாடு சென்னையில் நடைபெற்ற 16 ஆவது எடிசன் விருது விழாவில் 2023 ஆம் ஆண்டு வெளியாகிய சிறந்த உணர்வுப்பூர்வமான பாடலுக்கான விருதை 'ஐயோ சாமி நீ எனக்கு வேண்டாம்' என்ற இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் பாடலைப் பாடிய விண்டி குணதிலக்க வென்றுள்ளார்.

சர்வதேச திரைப்படப் பாடல்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கும் விழா அண்மையில் இந்தியாவில் நடைபெற்றது.

இந்தப் பாடலை எழுதிய பொத்துவில் அஸ்மின் மற்றும் இசையமைத்த சானுக விக்கிரமசிங்க ஆகியோரும் மேற்படி விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டனர். (ரெம-95)

## நான் பதவியிலிருந்து.....

சம்பள உயர்வு மற்றும் சம்பள மறுபரிசீலனை ஆகிய காரணங்களை வைத்து நான் பதவியிலிருந்து வெளியேற வேண்டிய தேவையில்லை. அப்படியும் நான் வெளியேறுவதாயின், இந்தப் பதவியைக் கொண்டு நாட்டுக்கு என்ன செய்ய நினைக்கிறேனோ அதனை செய்ய முடியாது போனால் மாத்திரமே பதவியை விட்டு விலகுவேன். நிறுவனத்தின் தலைவர் என்ற ரீதியில், நிறுவன ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் பொறுப்பு எனக்கு உள்ளது. அதைத்தான் நான் செய்தேன்" என அவர் குறிப்பிட்டார்.

"இந்த சம்பள அதிகரிப்பு மிக அதிகம் என்று சிலர் வாதிடலாம். அந்த கருத்துக்களுக்கும், நாடாளுமன்றத்தின் கருத்துக்களுக்கும் மதிப்பளித்து இந்த விவகாரத்தை மறு ஆய்வு செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள குழு, மற்ற நிறுவனங்களின் சம்பள உயர்வுடன் சம்பள உயர்வு அளவு அதிகமாக இருப்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒருவித நியாயமான பரிந்துரையை செய்யலாம். கூடிய விரைவில் இது குறித்து முடிவெடுக்க தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டும் என்பதே நமது கருத்தாகும். அந்த அவ்வாறான குழுவொன்றை நியமிப்பதற்கு நிதியமைச்சரும் இணக்கம் தெரிவித்துள்ளார்" எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்களான இவெட் பெர்னாண்டோ, நெலுமானி தவுலாகல மற்றும் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ரெம-93)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வெருகல் கட்டையாறு பாலம் அமைச்சரால் திறந்து வைப்பு



(ஹஸ்பர் ஏ. எச்)

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கட்டையாறு பாலமானது, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனினால் அண்மையில் (25) திறந்துவைக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரல, வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# “சிறந்த எழுத்தாளர்” விருது பெற்றார் கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இந்திய இலங்கை நட்புறவு ஒன்றியம் அண்மையில் (10), கண்டியில் நடாத்திய “மலையகம் 200” விருது வழங்கும் நிகழ்வின் போது, கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் சிறந்த எழுத்தாளருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்ற ஆசிரியையும் பன்னூலாசிரியரும், இலக்கிய ஆளுமையுமான இவர், முன்னாள் ஆளுநரும், முன்னாள் மத்திய மாகாண சபை முதலமைச்சருமான சரத் ஏக்கநாயக்க உட்பட்ட அதிதிகளிடமிருந்து இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.

# திருகோணமலையில் கடாட்சம் நூல் வெளியீடும் பாராட்டு நிகழ்வும்




(ஹஸ்பர் ஏ.எச்)

சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் “ கடாட்சம்” நூல் வெளியீடும் இலக்கியப் பணிக்கான பாராட்டு நிகழ்வும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் சம்பூர் தமிழ்க் கலாமன்றத்தின் தலைவர் மருத்துவர் அ.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்து, இறைவணக்கம், வரவேற்புரை, நூல் நயவுரை, நூல் வெளியீடு, கருத்துரைகள், பாராட்டு நிகழ்வு என்பன இடம் பெறவுள்ளன.



# மிதி வெடி



கனநாளைக்குப் பிறகு பொலிஸ்ஸ்ரேசனுக்குப் போக வேண்டியதாப் போச்சு.... நரமுனியில குற்றம் இல்லைங்கோ.... நரமுனி வீட்டுக்குள்ளயே துணிஞ்சு ஒரு பொடிப்பயல் இறங்கிப் போட்டுது.

மக்கள், மருமக்கள் எல்லாம் வேலைக்குப் போட்டுதுகள். நான் ஒருக்காச் சந்தையடிக்குப் போயிற்று வாறதுக்குள்ள வீட்டுக்குள்ள இறங்கி அலுமாரி, பெட்டி எல்லாம் தடவிப் பாத்து ஒண்டும் கிடைக்காத ஆத்திரத்தில கையில ஆப்பிட்டதுகள் எல்லாத்தையும் அடிச்சு நொறுக்கிப் போட்டு அடுப்படியில கிடந்த “காஸ் சிலிண்டரை”த் தூக்கிக் கொண்டு போட்டானுகள்.

சின்னனோ, பெரிசோ... சட்டத்தின் படி நடக்க வேணும் தானே? வீட்டில ஒரு களவு நடந்தால்... பொலீசில போய்ச் சொல்லத் தானே வேணும்...? அதுவும் புதுசா வந்திருக்கிற பொலீஸ்மா அதிபரும் கடும் பிடியான ஆளாம்... சட,சடவெண்டு எல்லாம் நடக்குது எண்டு கதைக்கிறாங்கள்.... நானும் சட்டம், ஒழுங்கில நம்பிக்கை வைச்சு அங்க போனன்..... போனால் தானே தெரிஞ்சுது... காவல் எண்டது மக்களுக்கில்லை..... கள்ளனுக்கும், காவாலி, கடைப்புலிக்கும் தானெண்டு..?

பத்தாயிரம் பெறுமதியான “காஸ் சிலிண்டரை”க் கொண்டு போட்டாங்கள் எண்டு “கொம்பளைண்ட்” குடுக்கப் போன எனக்கு, ஏன் இங்க வந்தன் எண்டு இருந்துச்சு.....

நான் போன நேரமாப் பாத்து, எனக்குப் பின்னால வந்தவர் கனக்கப் பறிகுடுத்துப் போட்டு வந்திருந்தார்.... மனிசி, பிள்ளையள் எல்லாரையும் கூட்டிக் கொண்டு வந்தவர்..... அழுது குளறினதைப் பாத்த உடன எனக்கு விளங்கீற்றுது... ஐயா கனக்கக் குடுத்துட்டார் எண்டு.....

என்ர முறைப்பாட்டை எழுதிக் கொண்டிருந்த தமிழ்ப் பொலீஸ்காரர் அழுது கொண்டிருந்தவையைப் பார்த்து இரங்கப்பட்டிருக்க வேணும், “ஐயா... கொஞ்சம் தள்ளி இருங்கோ ... அவையளிட்ட என்னவெண்டு கேட்டுட்டு வாறன்.....” நானும் மரியாதையா ஒதுங்கி வழி விட்டன்....

அந்தக் குடும்பம் முறைப்பாடு எடுக்கிறவருக்கு முன்னால இருக்க.... நான் கொஞ்சம் விலத்தி இருப்பம் எண்டு எழும்பி தள்ளி வந்து நிண்டன்.....

“சொல்லுங்கோ... ஐயா.... என்ன பிரச்சினை?” வலு பக்குவாமா அந்தத் தமிழ்ப் பொலீஸ்காரர் விசாரிச்சார்.

“விடியக் காத்தால வீட்டுக்க இறங்கி எல்லாத்தையும் கொண்டு போட்டாங்கள்..... “

பொறுங்கோ ஐயா.... ஆறுதலாச் சொல்லுங்கோ.... நாங்கள் பாக்கிறம்.....” அந்தப் பொலீஸ்காரர் சொன்ன வார்த்தைகள் உண்மையாகவே ஆறுதலாகத் தான் இருந்தது....

நடந்த சம்பவத்தை அவரும் விளக்கமாச் சொன்னார். எங்கையன் பூராயம் எண்டால் போதுமே? நானும் காதை அந்தப் பக்கம் விட்டுப் போட்டு “பேய் வெட்டி போல..”ப் பேசாமல் நிண்டன்....

அதிகாலை 2 மணிபோல அவையின்ர வீட்டுக்குள்ள இறங்கின ஒரு நாலு பேர் கழுத்தில கத்திய வைச்சு இருந்த எல்லா நகையளையும் பறிச்சுக் கொண்டு போட்டங்களாம். எல்லாமாச் சேர்த்து ஐம்பது லட்சம் வருமாம்....

ஐயா சொன்ன முறைப்பாட்டை வரி தவறாமல் எழுதுவதில் குறியாக இருந்தார் அந்தப் பொலீஸ்காரர்.... அவருக்குப் பக்கத்தில “சிவில்” உடுப்போட இருந்த ஒருத்தர் “போஃனை”யும் தூக்கிக் கொண்டு நான் நிண்ட பக்கமா வந்தார்.... “வட்ஸ்அப்” ல யாருக்கோ “கோல்” எடுத்தார்.... அவர் “வட்ஸ்அப் கோல்” தான் எடுக்கிறார் எண்டதைப் பாக்கக் கூடியதா இருந்தாலும், ஆருக்குக் “கோல்” எடுக்கிறார் எண்டது எனக்குத் தெரியேல்ல... ஆனால் எனக்குப் பக்கத்தில நிண்டு அவர் கதைக்கிறதும், மற்றப் பக்கத்தில கதைச்சவர் சொல்லுற பதிலுகளும் எனக்குத் தெளிவாக் கேட்டுச்சுது.... பத்திரிகைக் காரர் எண்டால் காது கூர்மை தானே.....?

“என்ன “..........” விடியப்பறம் உங்காலப் பக்கம் நல்லாக் கொண்டாடி இருக்கிறியள் போல....?

“சேர்.... நான் உங்க இல்லை சேர்.... கனடா விசாவுக்குப் “பிங்கர்” வைக்க கொழும்பில நிக்கிறன் சேர்.....”

“பொய் சொல்லப் படாது.... இங்க “கேஸ்” வந்திருக்கு....”

“சேர் சத்தியமா எங்கட ஆக்கள் இல்ல சேர்.... நீங்க “வீடியோ கோல்” வாங்கோ சேர்... நான் கொழும்பில நிக்கிறன் சேர்... நான் இல்லாட்டி எங்கட பெடியள் போகாங்கள் சேர்.... ஒரு வேளை ............ ம் பெடியளுமா இருக்கும். நான் சொல்லி விடுறன் சேர். உங்களோட கதைக்கச் சொல்லி.....”

“சரி ... சரி.... ஒழுங்கா வராட்டி.... நாங்களும் எங்கட வேலையைக் காட்டுவம்.....”

அவர் கோலை வச்சுட்டு அங்கால போயிட்டார்.... நான் எனக்கு ஒண்டுமே விளங்காத போலப் பேசாமல் நிண்டன்.....

உள்ளுக்குள்ள “அட்மின் பிரான்ஞ்”க்குப் போயிட்டு வந்த ஒரு பொம்பிளை வெளியில வந்தா..... கையில ஏதோ ஒரு துண்டு வைச்சிருந்தா.... அதிலுள்ள விவரங்களைச் சரி பாக்கிறா போலக் கிடந்துது.... அவாக்குப் பின்னால... “பொலீஸ் ரீசேட்” போட்ட இன்னுமொருவர் வந்தார். அவரும் என்னைப் பொருட்டாகவே மதிக்கவில்லை....

“மிஸ்... விதானை எல்லாம் சொல்லிச்சா.... “

“ஓம்... சேர்.... கொண்டு வந்தனான்.... ஒபிசுக்குள்ள வைச்சுத் தரலாமோ தெரியாது... அதான் வெளியில வந்தன்... “

“ஆ... நல்லம் நல்லம்.... கேட்டுக்கு வெளியில வைச்சுத் தாங்கோ... எவ்வளவு கொண்டு வந்தீங்கள்...?

“ரெண்டாயிரம் சேர்.....”

“ஜீ.எஸ். சொல்ல இல்லையா.... மூவாயிரம் தான் நான் வாங்குறது.... எல்லாருக்கும் குடுக்க வேணும் தானே.... ?

“ஓம்... சேர்.... “ அந்த அம்மா மண்டையச் சொறிஞ்சா....

“பிரச்சினை இல்லே.... தந்துட்டு போங்கோ....” எண்டு சொல்லி அந்தப் பெண்மணி குடுத்த “எல்வலப்”ஐ வாங்கி “பொக்கற்றுக்கு” ள் செருகினார் அந்தப் பொலீஸ்காரர்....

இப்பிடித் தான் அண்மையில பொன்னாலைக் கடற்படை முகாமுக்குப் பக்கத்தில அநியாயமா அடிச்சுக் கொல்லப்பட்ட ஒரு ஆளின்ர தகப்பனும் “பொலீஸ் ஸ்ரேசனி”ல தான் சொல்லியும் பொலீசார் வேணுமெண்டு தாமதிச்சதாலயோ... கவனக் குறைவா இருந்ததலயோ தான் தன்ர மகனுக்கு இப்பிடி நடந்ததெண்டு பகிரங்கமாச் சொல்லி இருந்தவர்.....

“அவற்றை விதி... அப்பிடி” எண்டு நாங்கள் தப்பிச்சுக் கொண்டாலும், உண்மை – நேர்மையோட நடக்கிற கனபேருக்கு மத்தியில கள்ளனிட்டையும் – காடனிட்டையும் வாங்கிற காசுக்காக நீதியைக் குழி தோண்டிப் புதைக்கிற ஒரு சில பேர் இருக்கும் வரை எத்தினை பொலீஸ்மா அதிபர்மார் மாறினாலும் புதுசா ஒண்டும் நடக்கப் போறதில்லைப் பாருங்கோ...!

உது மட்டுமில்லப் பாருங்கோ.... உப்பிடி எக்கச் சக்கமான சம்பவங்கள் நடக்குது.... ரோட்டில நிக்கிற “ட்ரபிக்”ல இருந்து “ஸ்ரேசனில” இருக்கிற “அட்மின்” வரை காசு தான் கடவுள்..... “ஓ.ஐ.சி” மாரை மாத்தினாலும், இலஞ்சமும் ஊழலும் குறைஞ்ச பாடில்ல.... சனத்திட்ட புடுங்கிற காசில பக்கத்தில இருக்கிற “பார்” காரனுக்குத் தான் உழைப்பு.

அப்பப் பாருங்கோவன்...... காவலுக்கு இருக்க வேண்டிதுகள் எல்லாம் காவல் காக்கிற லட்சணத்தை..?

நீங்கள் குடியுங்கோ.... கூத்தடியுங்கோ.... ஆனால் வேலை நேரத்தில போதையில இருக்கிறது குற்றம் எண்டு ஒரு சட்டம் இருக்குதெல்லோ.... அதை எண்டாலும் கொஞ்சம் பாருங்கோவன்... ?

ஊருக்கு உபதேசம்... உனக்கில்லையடி கண்ணே....

-நரமுனி-

# இளைஞர்களுக்கு போதைப் பொருள் விற்ற மருந்தக உரிமையாளர் உட்பட 10 பேர் கைது

## கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் சம்பவம்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் போதைக்கு பாவனைக்கு அடிமையான இளைஞர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த மருந்தக உரிமையாளர் உட்பட பத்து பேரை கட்டுநாயக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற 'யுக்திய' நடவடிக்கையுடன் இணைந்ததாக கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் போதை பாவனைக்கு அடிமையான இளைஞர்கள் குழுவொன்றை முன்னதாக கைது செய்திருந்தனர்.

இவர்களை தடுத்து வைத்து நீண்ட விசாரணையை நடத்தியதன் பின்னர் இந்த இளைஞர்களுக்கு போதைப பொருள் விநியோகித்த கட்டுநாயக்க அவரிவத்தை நகரிலுள்ள பிரதான ஆடை விற்பனை நிலைய ஊழியர்கள் நால்வரை கைது செய்ய முடிந்தது. அவர்களிடம் இது குறித்து நீண்ட விசாரணை நடத்திய பொலிஸார், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யும் மருந்தகத்தை இனங் கண்டதுடன் இந்த சட்ட விரோத செயலை மேற்கொள்ளும் மருந்தகத்தின் உரிமையாளரையும் கைது செய்ய முடிந்தது. அவருக்கு இந்த மருந்தகத்தை நடத்துவதற்கான சட்டபூர்வ வர்த்தக உரிமம் இல்லை என்பதும், அங்கு பணிபுரிய தகுதியான மருந்தாளர்கள் இல்லை என்பதும் விசாரணைகளின் போது தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெம-92)

# தேர்தலைப் பிற்போட அரசாங்கம் முயற்சி இராமலிங்கம் சந்திரசேகர் குற்றச்சாட்டு




தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருவதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடாத்திய ஊடகச் சந்திப்பின் போதே இராமலிங்கம் சந்திரசேகர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைக்கு அனைத்து கருத்து கணிப்புக்களிலும் தேசிய மக்கள் சக்தியே வெற்றிபெறும் என கூறப்படுகின்றது, இதனால் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுப்பதற்கு இவர்கள் முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

கடந்த 76 வருட ஆட்சியாளர்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ளுகின்றோம். அவர்களுடைய சகாப்தம் முடிவுக்கு வரப் போகின்றது. எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் புதிய அரசாங்கம் - புதிய ஜனாதிபதி தெரிவு இடம்பெறும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றேன், என்றார். (O1)

# பண்டிகைக் காலங்களில் ஏமாற்றப்படும் சாத்தியம்!

புத்தாண்டுக் காலத்தில் விற்பனை நிலையங்களினால் நுகர்வோர் ஏமாற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் “சிறப்பு விற்பனை” என்ற பெயரில் பொருட்களை விற்பனை செய்யும் இடங்களில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்யும்போது இந்த நிலைமை ஏற்படலாம் என அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் காலாவதியாகவுள்ள பொருட்களின் தகவல்கள் மாற்றப்பட்டு பண்டிகைக் காலங்களில் விற்பனை இடம்பெறலாம். எனவே, இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அதிகார சபையின் தகவல் பிரிவுப் பணிப்பாளர் அசேல பண்டார குறிப்பிட்டுள்ளார்.

# சொந்த ஊரில் பணியாற்றுவதற்கு பொலிஸாருக்கு அனுமதி இல்லை



சொந்த ஊரில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“எதிர்வரும் காலங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது சொந்த ஊரில் கடமையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் முதல் கான்ஸ்டபிள்கள் வரையிலான பதவி நிலைகளை வகிப்பவர்கள் இவ்வாறு சொந்த ஊரில் பணியாற்ற இடமளிக்கப்படாது.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது மனைவியரின் சொந்த ஊரிலும் கடமையில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாது.

இதற்கமைய பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள், துறைசார் பொறுப்பதிகாரிகள் முதல் கான்ஸ்டபிள்கள் வரையிலான பதவி நிலைகளை வகிப்பவர்கள் தங்களது ஊரில், மிக அருகாமையில் அல்லது மனைவியின் ஊரில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா? என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளேன்.

இதற்காக விசேட குழுவொன்றையும் நியமித்துள்ளேன்” - என்றார். (அ)

# பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டு கழகம் அம்பாறை மாவட்ட றக்பி சம்பியனானது



*(எம்.எம்.றம்ஸீன்)*

*தென்கிழக்கு பல்கலைகழகத்தில் இடம்பெற்ற அம்பாறை மாவட்ட பிரதேச கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான றக்பி போட்டியில் கலந்து கொண்டு பாலமுனை ட்றைஸ்டார் விளையாட்டுக்கழகம் மற்றுமொரு தடவை மாவட்டச் சம்பியனானது .*

*இதன்மூலம் எதிர்வரும் ஏப்ரல் 20ம் திகதி திருகோணமலையில் இடம் பெறவுள்ள கிழக்கு மாகாண மட்ட போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் அந்த அணி பெற்றுள்ளது.*

*குறிப்பாக எட்டாவது தடவையாக கிழக்கு மாகாண போட்டியில் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2022ம் வருடம் கிழக்கு மாகாண சம்பியனாக பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டு கழகம் தெரிவாகி இருந்தமை விசேட அம்சமாகும்.*

*மேற்படி நிகழ்விற்கு மாவட்ட விளையாட்டுப் பணிப்பாளர் மேடம் மானல் வீரசிங்க மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களான ஏ.இம்றுபஸ் கான், எம்.எச்.அஸ்வத், ஸீ.எம்.றிஸ்லி, ஏ.றப்சான் ஏ.எம். நௌஸாத் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.*

# யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் - 2024 நிகழ்வு



யாழ். மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தினம் - 2024 நிகழ்வு யாழ் மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று (26) காலை 9.30 மணிக்கு "அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்" என்னும் தொனிப்பொருளில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) தி.ரூபினி வரதலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மனிதவள முகாமைத்துவத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் சி.தேவரஞ்சினியும், கௌரவ விருந்தினராக தடகள வீராங்கனை சிறிசெயானந்தபவ அகிலத்திருநாயகியும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் உள்ளூர் பெண் முயற்சியாளர்களின் விற்பனைக் கூடங்கள் விருந்தினர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டன.

மேலும், இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலே விருந்தினர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன்சிறந்த பெண்தொழில்முயற்சியாளர்கள், சிறந்த பெண்சமூக மட்ட அமைப்புக்களும்கௌரவிக்கப்பட்டதுடன், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு மரக் கன்றுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள், மாவட்ட மகளிர் சம்மேளன பிரதிநிதிகள், பெண் முயற்சியாளர்களும் கலந்துகொண்டிருந்தார்கள். (01)

# கல்வி உதவிக்கான காசோலைகள் சம்மாந்துறையில் வழங்கி வைப்பு




(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட விசேட தேவையுடைய பெற்றோர்களது பிள்ளைகளுக்கு கல்வி உதவிக்கான காசோலைகள்மற்றும் விசேட தேவையுடையோருக்கான மருத்துவப் போக்குவரத்து உதவிக் கொடுப்பனவிற்கான காசோலைகள் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மட் ஹனீபா தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, சமூக சேவை உத்தியோகத்தர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் இரத்ததானம்



சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட பொறியியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று (26) நடைபெற்றது.

குறித்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு, "உதிரம் கொடுப்போம்! உயிரைக் காப்போம்!" எனும் தொனிப் பொருளில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள ஏனைய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் குருதிக்கொடை வழங்கினர். (02)

# காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட நூலகம் திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி கல்வி கோட்டத்திலுள்ள காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட நூலகம் நேற்றுமுன்தினம் (25) திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது

செலான் வங்கியின் செலான் பெஹஸர திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட 299 வது நூலகமாக இப் பாடசாலையின் நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி நயிமா அப்துஸ் சலாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செலான் வங்கி உதவி முகாமையாளர் றுவான் பெர்ணான்டோ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் காத்தான்குடி பிரதேசக் கல்விப்பணிப்பாளர் ஏ.ஜி.எம்.ஹக்கீம், செலான் வங்கியின் அதிகாரிகள், முகாமையாளர்கள், ஆசியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நூலகத்தின் நினைவுக் கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இந்த நூலகத்துக்கு செலான் வங்கியினால் மடிக் கணினியும் வழங்கப்பட்டது.



மாலைக்கதிர்
Maalaikkathir



# வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பயிர் அழிவுக்கான நட்டயீடு வழங்கப்படாமை!

## விரைவான நடவடிக்கைக்கு அழுத்தம்!

விவசாய அமைச்சர் கிளிநொச்சி வந்து சென்றமை தமக்கு தெரியாது என இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர் அழிவு தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் இன்று காலை 9.30 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்ற குறித்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், அங்கயன் இராமநாதன், எஸ். கஜேந்திரன், வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மாவட்ட பதில் அரசாங்க அதிபர் முரளிதரன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்பு தரப்பினர் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன் போது, கல்வி, காணி, போக்குவரத்து, சுகாதாரம் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பயிர் அழிவுக்கான நட்டயீடு வழங்கப்படாமை தொடர்பிலும் ஆராயப்பட்டது. விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என்பதால் நட்டயீடான காப்புறுதி தொகையை வழங்க முடியாது உள்ளதாக விவசாய காப்புறுதி நிறுவன பிரதிநிதி தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த முத்து சிவமோகன் குறிப்பிடுகையில், சுற்று நிருப்பத்தின் அடிப்படையில் பயிர்கள் மூன்றாக பிரிக்கப்படுகின்றன. முதல் மாதம், பூப்பதற்கு முன்பதான காலம், பூத்த பின்னர் அறுவடை செய்யும் வரையான காலமாக மூன்றாக பிரிக்கப்படுகிறது.

வெள்ளம் ஏற்பட்ட காலம் பூத்த பின்னரான காலம் என்பதால் அது மூன்றாவது நிலையில் உள்ளதாக கருதப்பட வேண்டும். இவ்விடயத்தை ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் எழுதியதுடன், அதன் பிரதியை அமைச்சர் உள்ளிட்ட பலருக்கும் அனுப்பி உள்ளேன்.

இந்த நிலையில், பூப்பதற்கு முன்பதான 2ம் நிலையில் பயிரழிவு மதிப்பீடு செய்யப்பட்டு நட்டயீடு வழங்க நடவடிக்கை



எடுக்கப்பட்டமையால் நாங்கள் அதற்கு உடன்படவில்லை. அழிவடைந்த காலம் பூத்ததன் பின்னரான மூன்றாவது காலப்பகுதி ஆகும்.

இவ்விடயம் தொடர்பில் விவசாய அமைச்சர் கிளிநொச்சிக்கு வருகை தந்தபோது அவரிடம் கூறவில்லையா? என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவரிடம் வினவினார். தமக்கு அமைச்சர் வந்தது தெரியாது எனவும், அவ்வாறு அறிந்திருந்தால் நிச்சயம் அவரை சந்தித்து இப்பிரச்சினையை முன்வைத்திருப்பேன் எனவும் அதற்கு அவர் பதில் தெரிவித்தார்.

அமைச்சர் வந்ததை விவசாயிகளுக்கு கூறவில்லையா? என கமநல சேவைகள் திணைக்கள அதிகாரியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வினவினார். தமக்கும் தெரியாது எனவும், முதல் நாளே தமக்கு நிகழ்வு தொடர்பில் அறிவிக்கப்பட்டது எனவும் அவர் பதிலளித்தார்.

அமைச்சர் வருகையில் சிறு தவறு இடம்பெற்றுள்ளதாகவும், அமைச்சருடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை கிளிநொச்சியில் ஏற்பாடு செய்து தீர்மானம் ஒன்றினை எடுப்போம் எனவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

சிறு போகம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் காலபோக அழிவு தொடர்பில் பயிரின் 3ம் நிலையை கருத்தில் கொண்டு விவசாயிகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்களை பெறுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலாளர்கள் ஒருவாரத்திற்குள் விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்வதாக தெரிவித்தமையை அமைச்சர் குறிப்பில் இடுமாறு தெரிவித்தார்.

ஆனாலும், விவசாய காப்புறுதி நிறுவனம் பயிர் அழிவை 2ம் நிலையாக மதிப்பிட்டு வழங்க முடிவெடுத்து உள்ளமையால், விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களை பெற முடியாது உள்ளதாகவும், விவசாயிகள் மூன்றாம் நிலையிலேயே தமக்கு அழிவு ஏற்பட்டதாக கூறுவதால் கருத்து முரண்பாடான நிலை உள்ளதாகவும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டும் வகையில் பூத்த பின்னரான காலப்பகுதியாக மூன்றாம் நிலையை மதிப்பீடாக கருதி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களை பெறும் வகையில் தீர்மானமாக எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

தென்னிலங்கையில் நட்டயீடுகள் கொடுத்து முடிந்திருக்கும். ஆனால், இங்கு பேச்சளவிலேயே உள்ளது. தீர்மானத்தை எடுத்து, விவசாயிகளிடம் விண்ணப்பங்களை பெறுங்கள். எவ்வாறு கொடுக்கலாம் என்பதை அமைச்சரோடு பேசிப் பெற்றுக் கொடுங்கள் எனவும் குறிப்பிட்டார்.

அந்த வகையில், வெள்ள அழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சட்ட ரீதியாக பூத்த பின்னரான காலப்பகுதியான மூன்றாம் நிலையை விவசாய இழப்பீட்டு காலமாக கருத்தில் எடுத்து நட்டயீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான விண்ணப்பங்களை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் சபையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்தார். (02)




## மன்னார் கரப்பந்தாட்ட பிரிமியர் லீக் சுற்றுப்போட்டியில் தாராபுரம் அல் ஜின்னா விளையாட்டுக்கழகம் சம்பியனானது




(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார் கரப்பந்தாட்ட பிரிமியர் லீக்கினால் அண்மையில் நடத்தப்பட்ட அணிக்கு 6 பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி மன்னார் துள்ளுக்குடியிருப்பு மைதானத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

தாராபுரம் அல்ஜின்னா விளையாட்டுக் கழகமும் துள்ளுக்குடியிருப்பு மாட்டிரேஸ் விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் மோதி, தாராபுரம் அல்-ஜின்னா விளையாட்டுக் கழகம் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

குறித்த போட்டியில் வெற்றியீட்டிய அணிகளுக்கான கிண்ணங்களையும், பரிசில்களையும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

மன்னார் மாவட்ட முன்னாள் கரப்பந்தாட்ட வீரர்கள் பலரும் இராஜாங்க அமைச்சரினால் அன்றைய தினம் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## கொட்டும் மழையிலும் மூன்றாவது நாளாக போராட்டம் தொடர்கிறது

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான நிருவாக அடாவடித்தனத்திற்கு எதிராக நீதி கோரி நடாத்தும் மக்கள் போராட்டம் இன்று (27 ) புதன்கிழமை மூண்றாவது நாளாகவும் கொட்டும் மழையிலும் தொடர்கிறது.

“அரசியல்வாதிகளே அரச அதிகாரிகளே அமைச்சின் செயலாளரே உங்கள் பதில் என்ன?“ என்று அங்கு குழுமியிருந்த மக்கள் கேள்வி எழுப்பினார்கள்.

நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களுமாக பிரதேச செயலத்தின்



முன்னால் வீதியருகே அமர்ந்து அமைதியான முறையில் முன்னெடுத்து வருகிறார்கள்.

நேற்று மற்றும் நேற்றுமுன்தினத்தை விட இன்று அதிகளவான பொது மக்கள் அங்கு கூடத்தொடங்கினர். பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

போராட்டக் காரர்கள் கூறுகையில், கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளை பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாக திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமை நாடறிந்த விடயம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாக தடுக்கப்பட்டு வருவதுடன் அண்மைக்காலமாக இருக்கும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டும் வருகின்றன, என்றனர்.

பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை பெறுவதற்கும், இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அரச அதிகாரங்களை பெற்று மக்களுக்கான அரச சேவையை பெறுவதற்கும் முடியாமல் கடந்த 30 வருடங்களாக தவித்துக் கொண்டிருக்கும் இப்பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் (25) அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இன்று (27) மூன்றாவது நாளாகவும் போராட்டம் தொடர்கிறது. பெருமளவான பொது மக்கள் பங்குபற்றி வருகின்றனர்.

## அம்பாறை லாகுகல நுகே வெவ குளம் மக்கள் பாவனைக்காக கையளிப்பு!



(ஹஸ்பர் ஏ. எச்)

வறட்சியான காலங்களில் விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு உதவும் வகையில் அம்பாறை லாகுகல நுகே வெவ குளத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மக்கள் பாவனைக்காக கையளித்தார்.

8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்குளம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விவசாய அமைச்சின் செயலாளர் முத்துபண்டா, கடற்தொழில் மற்றும் நீரியல் வள மீன்பிடி திணைக்கள பணிப்பாளர் சுதாகரன் உட்பட அரச அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

Google Play
App Store

DOWNLOAD DRIVER APP:

**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**

உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

Google Play
App Store

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

## JRIDE TAXI APP SPEED IT NET

பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2024 இல் வெளியிடப்பெற்றது.